முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 285/2013

நாள். 27.01.2026 பி.வா.சா.4 – திரு.ஜான்சன்

த/பெ - திரு. பிரான்சிஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கு வாதி சுசிலா தேவியை தெரியுமா என்றால் தெரியும். வழக்கு வாதியின் உடன் பிறந்த சகோதரி, சகோதரர் மற்றும் தாயார் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. வசந்தி என்பவரை யார் என்று தெரியுமா என்றால் தெரியும், அவரிடம் நான் சொத்து கிரையம் வாங்கி உள்ளேன். வழக்கு 2 ம் பிரதிவாதி செல்லப்பாவை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் தெரியாது. நான் தற்போது நீதிமன்றத்தில் வந்து தான் சந்தித்தேன்.

2) வழக்கு 1ம் பிரதிவாதி ஆசீர்வாதம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், ஆசீர்வாதம் தான் என்னை நீதிமன்றத்திற்கு வாக்குமூலம் அளிக்க அழைத்து வந்தார். 1ம் பிரதிவாதி ஆசீர்வாதத்தை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் ஆசீர்வாதத்தை 11 வருடங்களாக தெரியும். நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணம் உங்கள் கைக்கு எந்த வருடம் வந்தது என்றால் 2010 ம் ஆண்டு என் கைவசம் கிடைத்தது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:04:50 +0530

3) முத்துவேல் நாடாருக்கும், சுந்தரராஜ் அம்மாளுக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். முத்துவேல் நாடாரின் இறப்பு சான்றிதழையோ, வாரிசு சான்றிதழையோ நீங்கள் பார்த்ததில்லை என்றால் சரி தான். முத்து வேல் நாடாருக்கு சட்டப்படியான வாரிசுகள் யார் என்று தெரியுமா என்றால் முத்து வேல் நாடார் உயில் எழுதி வைத்துள்ளார் அதன் அடிப்படையில் வாரிசுகள் யார் என்று தெரியும்.

4) முத்துவேல் நாடாருக்கும் அவரது மனைவி சுந்தரராஜ் அம்மாளுக்கும் வழக்கு நடந்த விவரம் தெரியுமா என்றால் சொத்தை கிரையம் பெற்ற பிறகு தெரியும், செவி வழியாக கேள்விப்பட்டேன். உயில் ஆவணம் எழுதப்பட்ட போது உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். உயில் ஆவணத்தை படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன், தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. உயில் ஆவணத்தில் சுந்தரராஜ் அம்மாளுக்கும், முத்து வேல் நாடாருக்கும் விவாகரத்து வழக்கு நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) சுந்தரராஜ் அம்மாளுக்கும், முத்து வேல் நாடாருக்கும் விவாகரத்து நடைபெற்றது தொடர்பாக யாரிடமும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி தான். சுந்தரராஜ் அம்மாளுக்கும், முத்து வேல் நாடாருக்கும் இடையே ஒரு ஜீவனாம்ச வழக்கு நடைபெற்றது பற்றி தெரியுமா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:04:57 +0530

அதனால் நீங்கள் நீதிமன்றத்தில் சொத்து தொடர்பாக ஆவணங்கள் பற்றி தேடிப்பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி தான்.

6) நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணம் 23.08.1989 ல் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் படித்து பார்த்துள்ளேன், தற்போது நினைவில்லை. சொல்லப்படும் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் வசந்தி என்பவரின் வயது 16 என கூறப்பட்டிருக்கிறது என்றால் சரி தான். வசந்திக்கு 1989 ம் ஆண்டு காலத்தில் 16 வயது என்றால் அவர் பிறந்த வருடம் என்பது 1973 என்றால் சரி தான்.

7) முத்துவேல் நாடாரின் மனைவி திருநெல்வேலி, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பிறப்பித்த ஜீவனாம்ச வழக்கு உத்தரவுக்கு மேல் சீராய்வு மனு தாக்கல் செய்ததில் சீராய்வு மனுவில் செல்லத்தங்கம் அம்மாளுக்கு முத்துவேல் நாடார் கணவர் அல்ல என்றும் ரெங்கசாமி என்பவர் கணவர் என முத்துவேல் நாடாரே சொல்லி இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது.

8) 1974 ல் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவில் செல்லத்தங்கம் அம்மாள் தன்னுடைய மனைவி அல்ல என்றும் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் வசந்தி என்ற மகள் பிறந்ததாகவும் அவருக்கு பி.வா.சா-ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் 1973 ம் வருடம் அவர் பிறந்ததாகவும் குறிப்பு உள்ளது என்றால் நான் கூறும்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:05:04 +0530

பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணம் பொய் ஆனது என்றும் ஆள் மாறாட்டம் செய்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டவாறு முத்து வேல் நாடாருக்கும், சுந்தரராஜ் அம்மாளுக்கும் விவாகரத்து வழக்கு நடைபெற்றதா என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான், உயிலில் உள்ளது.

9) அவ்வாறு முத்து வேல் நாடாருக்கும், சுந்தரராஜ் அம்மாளுக்கும் விவாகரத்து வழக்கு எதுவும் நடக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் உண்மையாக நம்பும் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணம் போலி என்பதை வழக்கு வாதி தாக்கல் செய்திருக்கிற வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு முன் அசல் ஆவணங்கள் பார்த்ததில்லை என்று சொன்னால் சரி தான்.

10) முத்துவேல் நாடார் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தை எழுதவில்லை என்றும் ஆள் மாறாட்டம் செய்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தை உங்களைத் தவிர வேறு எவரிடமும் கொடுக்கவில்லை என்றால் சரி தான். பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணம் உங்களுக்கு எப்படி, எவர் மூலம் எப்போது கிடைத்தது என உங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:05:10 +0530

11) இந்த வழக்கில் உயில் ஆவணம் தாக்கல் செய்வதற்கும், வாக்குமூலம் அளிப்பதற்கும் நீங்கள் உரிமைப் பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை முத்து வேல் நாடார் எழுதவில்லை என்றால் சரியல்ல.

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:05:16 +0530